# ஐக்கிய அரபு அமிரகத்தின் அங்கிகாரம் பெற்ற உலமாக்கள் சபை வெளியிட்டுள்ள மார்க்கச் சட்ட திர்ப்புகள்.

| | |
|---|---|
| வெளியிடு | ஐக்கிய அரபு அமிரகம்<br>الهيئة العامة للشؤون الإسلامية والأوقاف<br>GENERAL AUTHORITY OF ISLAMIC AFFAIRS & ENDOWMENTS |

**Islamic Social Activity** **Islamic Fatwa Translation**

| | |
|---|---|
| மொழிபெயர்ப்பு | மௌலவி, அப்சலுள் உலமா<br>செய்யிது அபூஸாலிஹ் பிலாலி B.Com., DUBAI.<br>Contact No. +971529919346<br>Email :abusalih100@gmail.com |

| | |
|---|---|
| ندوة علماء البلالية<br>NADVATHUL ULAMAIL BILALIA | *Bilalia Ulamas' Association-Dubai Chapter*<br>*The Alumni Team of Bilalia Arabic College - Chennai*<br>*Website: www.bilalia.org* |

மார்க்கத் தீர்ப்புகள்:

- கொழுக்கட்டை பெருநாள்,
- ஷஃபான் மாதத்தின் சிறப்பு,
- பராஅத் இரவின் சிறப்பு,
- பராஅத் நோன்பு

இதனை பற்றிய கேள்விகளுக்கு அமீரக உலமாக்களின் தீர்ப்புகள்:

1. கேள்வி: ஷஃபான் மாதத்தின் 15 வது பிறையில் நமது குழந்தைகள் 'ஹக்குல் லைலா'(حق الليلة) கொண்டாடுகிறார்கள். அதனைப் பற்றிய சட்டம் என்ன?

விளக்கம்: எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! (அவன்தான்) அகிலத்தார் யாவரையும் படைத்து வளர்த்து தகுந்த பக்குவப்படுத்துபவன். ஸலவாத்தும் ஸலாமும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும், அவர்களின் குடும்பத்தினரின் மீதும் அனைத்து சஹாபாக்கள் மீதும் உண்டாகட்டும்.

இந்த கேள்வியை கேட்ட சகோதரனே! உமக்கு அல்லாஹ் பரக்கத்து செய்வானாக!! ஷஃபான் மாதத்தில் 15 வது பிறை இரவில் குழந்தைகள் குதூகலத்துடன் மகிழ்ச்சி பொங்க கொண்டாடுகிறார்கள். அதற்கு 'ஹக்குல் லைலா' என்று சொல்லப்படுகிறது. அந்த இரவு பல சிறப்புகள் நிறைந்த இரவாகும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள், “ஷாபானுடைய 15 வது இரவிலே அல்லாஹுத்தஆலா தனது அடியார்களை நோக்கி சிறப்பான பார்வையாக பார்க்கிறான், பிறகு தன்னுடைய அடியார்களில் இரண்டு பேரைத்தவிர மற்ற அனைவருடைய பாவத்தையும் மன்னிக்கிறான், அந்த இரண்டில் ஒருவர், மற்றவர்களிடம் சண்டை, சர்ச்சைகளில் ஈடுபடுபவர் மற்றொருவர் தற்கொலை செய்து கொண்டவர்” **(الإمام أحمد في مسنده)**

இந்த காலத்தில் மக்கள் மற்றும் சிறுவர்கள் இந்த நாளிலே புத்தாடைகளை அணிந்து உற்சாகமாகவும், மகிழ்ச்சியாகவும் இந்த நாளை கொண்டாடுகிறார்கள். மேலும் அவர்களை சுற்றி இருக்கக்கூடிய வீடுகளுக்கும் சென்று மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்கிறார்கள். குறிப்பிட்ட சில இஸ்லாமிய பாடல்களை பாடிக்கொண்டும், கேட்டுக்கொண்டும் தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்துகிறார்கள். இந்த இரவினுடைய கடைசியில் அவர்கள் இனிப்புகளையும், அன்பளிப்புகளையும் பரிமாறிக்கொள்கிறார்கள்.

மேலும் இவ்வாறு செய்வது நமது மார்க்கத்தில் ஆகுமானதா இல்லையா என்று பார்க்கும் போது, பொதுவாக ஒரு விஷயம் என்னவென்றால் மார்க்கத்தில் எந்தந்த விஷயமெல்லாம் மார்க்கத்திற்கு எதிரானதாக இல்லையோ அந்த விஷயங்களை மார்க்கத்திலே செய்வதற்கு அனுமதி இருக்கிறது. மேலும் மார்க்கத்தில் உள்ள பிக்ஹ்வுடைய அடிப்படை சட்டங்களுக்கு எதுவெல்லாம் எதிராக இல்லையோ அதுவெல்லாம் மார்க்கத்திலே செய்ய அனுமதி இருக்கிறது.

மார்க்கச் சட்ட அடிப்படைகளில் இதுவும் ஒன்று. இப்படி கொண்டாடுவதில் குழந்தைகளுக்கு நல்ல துஆ கிடைக்கிறது. "நிச்சயமாக (பின் வரும்)ஐந்து இரவுகளில் துஆ ஏற்றுக் கொள்ளப்படும்:
1. ரஜப் மாதத்தின் முதல் இரவு, 2. ஜும்மாவுடைய இரவு, 3. ஹஜ்ஜுப் பெருநாளுடைய இரவு, 4. நோன்புப் பெருநாளுடைய இரவு, 5. ஷஃபான் மதத்தின் 15 வது இரவு, என்றாலும் இதனை கட்டாயக் கடமையாக்காமல், முஸ்தஹப்பான செயலாக கருதலாம் என்று நான் கருதுகிறேன்." என்று இமாம் ஷாபிஈ (ரலி) அவர்கள் கூறியுள்ளார்கள். எனவே இதன் அடிப்படையில் குழந்தைகள் வழக்கமாக இந்த இரவில் கொண்டாடுவதை நாம் தடுக்க வேண்டிய அவசியம் இல்லை. ஷரீஅத் நேரடியாக தடுக்காத எந்த ஒரு நடைமுறை பழக்க வழக்கமும் ஆகுமானதுதான். அல்லாஹ்வே மிக அறிந்தவன்.

தீர்ப்பு: ஷஃபான் மாதத்தின் 15 வது பிறை இரவில் உற்சாகத்துடன் மகிழ்ச்சி பொங்க குழந்தைகள் கொண்டாடுவதிலும், பெரியவர்களிடம் அன்பளிப்பை பெறுவதிலும் எந்த குற்றமும் இல்லை. ஷரீஅத்திற்கு புறம்பாக இல்லாததால் இது ஆகுமான செயலாகும். அதுமட்டுமல்ல முடிந்தால் நீயும் இந்த இரவை சிறந்த முறையில் கண்ணியப்படுத்திக் கொண்டாடு. அல்லாஹ்வே மிக அறிந்தவன்.

*குறிப்பு: 'ஹக்குல் லைலா' (حق الليلة) என்பது அரபி குழந்தைகள் புத்தாடைகள் உடுத்தி, இதற்கென்றே பிரத்தியேகமான பைகளை தோளில் தொங்கவிட்டுக் கொண்டு ஒவ்வொரு வீடாக சென்று இஸ்லாமிய பாடல்களை பாடி பெரியவர்களை மகிழ்வித்து, அவர்களின் துஆவையும் பெற்று பைகள் நிறைய சாக்லேட்கள், இனிப்புகள் பெற்றுக்கொண்டு வருவார்கள்.*
*இந்த பழக்கம் நமது அமீரகம் உட்பட ஏனைய அரபு நாடுகளிலும் இன்று வரை நடைமுறையில் உள்ளது. நமது ஊர்களிலும் இதே நாளில் இந்த பழக்கம் "கொழுக்கட்டை பெருநாள்" என்று கொண்டாடப்பட்டு வந்ததை உங்கள் மேலான கவனத்துக்கு கொண்டு வருகிறோம்.*
*(பார்க்க:*
*http://gulfnews.com/news/gulf/uae/heritage-culture/exciting-events-lined-up-to-celebrate-haq-al-laila-1.838661*
*http://www.khaleejtimes.com/kt-article-display-1.asp?xfile=data/nationgeneral/2012/July/nationgeneral_July51.xml&section=nationgeneral)*

2. ஷஃபான் மாதத்தின் 15 வது பிறை அன்று மக்கள் இரவு முழுவதும் தூங்காமல் வணக்கத்தில் கழிக்கிறார்கள். பிறகு பகலில் நோன்பு வைக்கிறார்கள். இப்படி செய்வது நமது மார்க்கத்தில் கூடுமா?

விளக்கம்: எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! (அவன்தான்) அகிலத்தார் யாவரையும் படைத்து வளர்த்து தகுந்த பக்குவப்படுத்துபவன். ஸலவாத்தும் ஸலாமும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும், அவர்களின் குடும்பத்தினரின் மீதும் அனைத்து சஹாபாக்கள் மீதும் உண்டாகட்டும்.

உமது கேள்வியில் இரண்டு பகுதிகள் உள்ளன:

முதல் பகுதி: இரவு முழுதும் நின்று வணங்குதல்.

இப்படி நின்று வணங்குதல் மார்க்கத்தில் முஸ்தஹப்பான செயல். எனவே இந்த இரவில் முடிந்த வரை தொழுகை மற்றும் திக்ர்கள் செய்யவேண்டும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள், "ஷாபானுடைய 15 வது இரவிலே அல்லாஹுத்தஆலா தனது அடியார்களை நோக்கி சிறப்பான பார்வையாக பார்க்கிறான், பிறகு தன்னுடைய அடியார்களில் இரண்டு பேரைத்தவிர மற்ற அனைவருடைய பாவத்தையும் மன்னிக்கிறான், அந்த இரண்டில் ஒருவர், மற்றவர்களிடம் சண்டை, சர்ச்சைகளில் ஈடுபடுபவர் மற்றொருவர் தற்கொலை செய்து கொண்டவர்" **(الإمام أحمد في مسنده)**

மேலும் நமது கண்மணி நாயகம் (ஸல்) அவர்கள் : ஷஃபான் மாதத்தின் 15 வது பிறை வந்து விட்டால், அதன் இரவில் நின்று வணங்குங்கள். அதன் பகலில் நோன்பு வையுங்கள். ஏனெனில் நிச்சயமாக அல்லாஹ் இந்த நாளில் சூரியன் மறையும் நேரத்தில் துன்யாவின் (முதல்) வானத்திற்கு வந்து, "யாரவது (என்னிடம்) பிழை பொறுக்க தேடுகிறீர்களா? நான் அவரை மன்னித்து விடுகிறேன். யாரவது (என்னிடம்) ரிஸ்க் தேடுகிறீர்களா? நான் அவருக்கு ரிஸ்க் தருகிறேன். யாரவது (என்னிடம்) பிரச்சனைகளுக்கு நிவாரணம் தேடுகிறீர்களா? நான் அவருக்கு நிவாரணம் தருகிறேன். யாரவது (என்னிடம்) அப்படி இருக்கிறீர்களா? யாரவது (என்னிடம்) அப்படி இருக்கிறீர்களா? என்று பஜ்ர் நேரம் வரும் வரை கேட்டுக்கொண்டே இருக்கிறான்." **(ابن ماجه)**

“ஹதீஸ்களில் வந்ததைப் போல் ஷஃபான் மாதத்தின் 15 வது பிறையில் இரவு முழுவதும் நின்று வணங்குவதும், அந்த இரவில் இறைவனின் அருட்கொடைகளையும், எச்சரிக்கைகளையும் பற்றி விளக்கமாக பயான் கேட்பதும் ஏற்றமான செயல். இந்த இரவு முழுவதும் நின்று வணங்குவதன் நோக்கம், அதன் முழு பலனையும் நாம் பெற வேண்டும் என்பதுதான்”
**(كتاب البحر الرائق شرح كنز الدقائق)**

இரண்டாவது பகுதி: அந்த பிறையின் பகலில் நோன்பு வைப்பது.

அதன் பகலில் நோன்பு வைப்பது முஸ்தஹப்பான செயல். “ஷஃபான் மாதத்தின் 15 வது பிறையின் பகலில் நோன்பு வைப்பது மிக ஏற்றமான செயல்” என்று இமாம் அல்லாமா ஸாவி (ரஹ்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

மேலும் இமாம் அல்லாமா இப்னு ஹஜர் அவர்கள், “ஷஃபானின் வது பிறையில் நோன்பு வைப்பது சுன்னத்தாகும். காரணம் அய்யாமுல் பியள் (பிறை 13,14,15) என்பதை கவனித்தாலும் அந்த நோன்பு சுன்னத் ஆகும். (**الفتاوى الفقهية الكبرى**) அல்லாஹ்வே மிக அறிந்தவன்.

தீர்ப்பு: ஷஃபான் மாதத்தின் 15 வது பிறையில் இரவு முழுதும் நின்று வணங்குவது முஸ்தஹப்பாகும். அதே போன்று அதன் பகலில் நோன்பு வைப்பதும் முஸ்தஹப்பாகும். அல்லாஹ்வே மிக அறிந்தவன்.

---

3. ரஜப் மற்றும் ஷஃபான் ஆகிய இருமாதங்களில் எந்த எந்த நாட்களில் நோன்பு வைக்க வேண்டும் என்று மார்க்கம் ஆர்வமூட்டுகிறது?

விளக்கம்: எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! (அவன்தான்) அகிலத்தார் யாவரையும் படைத்து வளர்த்து தகுந்த பக்குவப்படுத்துபவன். ஸலவாத்தும் ஸலாமும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும், அவர்களின் குடும்பத்தினரின் மீதும் அனைத்து சஹாபாக்கள் மீதும் உண்டாகட்டும்.

நாம் அனைவரும் ரமளானில் சிறப்பை அடையும் பாக்கியத்தை அல்லாஹ்விடம் மன்றாடி கேட்போம். அதே போன்று அதிகமாக உபரியான நோன்பு வைக்கும் பாக்கியத்தையும் கேட்போம். இது சம்பந்தமாக இமாம் அல்லாமா ஸாவி அவர்கள், “ரஜப் மாதத்திலும், ஷஃபான் மாதத்திலும் நோன்பு வைப்பது ஏற்றமான

செயல். திங்கள்கிழமை, வியாழக்கிழமை நோன்பு வைப்பதும் ஏற்றமான செயல். ஷஃபான் மாதத்தின் 15 வது பிறையில் நோன்பு வைப்பதும் ஏற்றமான செயல்" (**في حاشيته على الشرح الصغير**) அல்லாஹ்வே மிக அறிந்தவன்.

தீர்ப்பு: ரஜப் மற்றும் ஷஃபான் மாதத்தில் பொதுவாகவே உபரியாக நோன்பு நோற்பது முஸ்தஹப்பாகும். மேலும் ஷஃபான் மாதத்தில் வது பிறையில் நோன்பு நோற்பது வலியுறுத்தப்பட்ட முஸ்தஹப்பான செயலாகும். அல்லாஹ்வே மிக அறிந்தவன்.

---

குறிப்பு:

அமீரக உலமாக்கள் கேள்வி கேட்பவரை நோக்கி தீர்ப்பு தருகிறார்கள். எனவே, 'நீ' 'உன்' என்ற ஒருமையாக விளிக்கிறார்கள். ஆகவே மொழிப்பெயர்ப்பிலும் அப்படியே இடம் பெறுகிறது.

---